# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 69/2024

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.4

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. மாதா | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 08th day of December, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது இராஜபாளையம் மாலையாபுரம் தெருவில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோனவர் எனது கணவர். அவர் பெயர் ராயப்பன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் இராஜபாளையம் திருவள்ளுவர் நகரைச்சேர்ந்தவர். எதிரியின் உறவினர்கள் எங்கள் தெருவில் அதிகம் வசிப்பதால் எங்கள் தெருவிற்கு அடிக்கடி வந்து செல்வதன் அடிப்படையில் தெரியும். எதிரியும் எனது கணவர் ராயப்பனும் சேர்ந்து தினமும் குடிப்பது வழக்கமாகக்கொண்டிருந்தனர். எனது கணவர் ராயப்பன் செட்டிரிங் வேலைக்கு சென்று வருமானம் ஈட்டிவந்தார். எனது கணவர் தினமும் குடித்து விட்டு சண்டைபோட்டதால் சிறிது காலம் இருவரும் பிரிந்துவாழ்ந்து வந்தோம். எனக்கும் எனது கணவருக்கும் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். அவரது பெயர்கள் பிரேமா, சத்தியா ஆகியோர்கள் ஆவார். பிரேமா என்பவருக்கு கடைய நல்லூரில் மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் செய்துவைத்துவிட்டோம்.

எனக்கு சம்பவம் நடந்த தேதி தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்

இரவு சுமார் 11.00 மணிக்கு எனது தங்கையின் கணவர் மாரிக்குமார் என்பவர் எனக்கு போன் செய்து எனது கணவரும் எதிரியும் குடித்துக்கொண்டிருக்கும்போது இருவருக்கும் சண்டை வந்து எதிரி எனது கணவரைப்பார்த்து அசிங்கமான வார்த்தைகளில் திட்டியதாகவும், பதிலுக்கு எனது கணவரும் திட்டியதாகவும், அப்போது எதிரி டிவியை தூக்கி எனது கணவரின் தலையில் போட்டு காயப்படுத்திவிட்டதாகவும், எனது கணவர் இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார். உடனே நானும் எனது மகள் சத்யாவும் வீட்டிலிருந்து கிளம்பி இராஜபாளையம் இளந்தோப்பு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு சென்று பார்த்தபோது எனது கணவர் இறந்துவிட்டதாக மருத்துவர் தெரிவித்தார். நான் எனது கணவரை பார்த்தபோது அவரது முகம் முழுவதும் சிதைந்து இருந்தது. தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. குடித்துவிட்டு நடந்த தகறாரில் எனது கணவரின் தலையில் எதிரி டிவியை தூக்கி போட்டதால் மேற்கண்ட காயங்கள் என தெரிந்துகொண்டேன். நடந்த சம்பவம் சம்பந்தமாக எனது சகோதரியின் மகன் சித்திரை முத்து என்பவர் இராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்பதை தெரிந்து கொண்டேன். அதன்பின்னர் நடைபெற்ற பிரேத விசாரணையில் நானும் கலந்துகொண்டேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. எனது தங்கையின் கணவர் போனில் சொன்ன பின்புதான் தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் மற்றொரு பையனுடன் சண்டை போட்டவரின் பெயர் , விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எனது கணவர் மீது ஒரு பையன் டிவியை தலையில் போட்டதாக சொன்னேன் என்றால் சரிதான். நான் அரசு மருத்துவமனைக்கு இரவு 12.00 மணிக்கு சென்றேன். மருத்துவமனையில் எனது கணவரை ஐஸ் பெட்டியில் வைத்திருந்தார்கள். ஐஸ் பெட்டியில்

வைத்திருந்தால் எனது கணவரை என்னால் சரியாக பார்க்கமுடியவில்லை என்றால் சரியல்ல. ஐஸ்பெட்டியில் இருந்து எடுத்து வெளியே காண்பித்தார்கள். சாட்சி தனது கணவரை மருத்துவமனையில் ஸ்டெச்சரில் வைத்திருந்தாக சொல்கிறார். ஐஸ்பெட்டியில் இருந்து எடுத்து வெளியே காண்பிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.